# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் - பட்டமேற் டிப்ளோமா

## தகவல் ஏடு

## 2024/2025

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் துறை
கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட

தொலைபேசி இல. 011-2881168

தொலைநகல் 011-276805

மின்னஞ்சல் pgdelm688@gmail.com

இணையத்தளம் - www.ou.ac.lk

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் - பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

தகவல் ஏடு

2024/2025

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் துறை

கல்விப்பீடம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

நாவல, நுகேகொட

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் - பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025

இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விப் பீடத்தின் கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் துறையினால் 2024/2025 ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்படும் கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் - பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் பற்றிய பொதுவான தகவல்கள் இத்தகவல் ஏட்டில் தரப்பட்டுள்ளன.

இப்பிரசுரத்தில் செம்மையான தகவலை அளிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் திறந்த பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளில் பின்னர் எடுக்கப்படுகின்ற மாற்றங்கள், கொள்கை மாற்றங்கள், நிதி அல்லது வேறு இடர்பாடுகள் காரணமாக ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றிற்கு இணங்க இத்தகவல் ஏட்டில் தரப்பட்டுள்ள விடயங்கள் மாற்றங்களுக்கும் திருத்தங்களுக்கும் உட்படலாம்

கல்விப்பீடம்
கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் துறை
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட

# உள்ளடக்கம்

## முதலாவது பகுதி – பொதுத் தகவல்கள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1.0 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | | 05 |
| | 1.1 | பாடநெறிகளும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களும் | 05 |
| | 1.2 | கற்பித்தல் முறைகள் | 09 |
| | 1.3 | மதிப்பீட்டு முறை | 10 |
| | 1.4 | பிராந்திய சேவைகள் | 10 |
| | 1.5 | வேறு சேவைகள் | 11 |
| | 1.6 | கற்கை நிகழ்ச்சித்திட்ட கட்டணங்கள் | 11 |


## இரண்டாவது பகுதி – கல்விப் பீடம்


2.0 கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் - பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
12

| | | |
|---|---|---|
| 2.1 | நோக்கங்கள் | 12 |
| 2.2 | அனுமதித் தேவைகள் | 12 |
| 2.3 | கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் பாடநெறி உள்ளடக்கம் | 13 |
| 2.4 | நாட்பாடசாலைகளும் போதனாவகுப்புகளும் | 14 |
| 2.5 | கற்பித்தல் மொழிமூலம் | 14 |
| 2.6. | பிராந்திய/கற்கை நிலையங்கள் | 14 |
| 2.7 | மதிப்பீடு | 15 |
| 2.8 | சான்றிதழ் வழங்கல் | 17 |
| 2.9 | கட்டணங்கள் | 17 |
| 2.10 | நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பம் | 18 |
| 2.11 | விண்ணப்பப் படிவம் பற்றிய குறிப்பு | 18 |
| 2.12 | விண்ணப்பத்தினை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | 18 |

# பகுதி I
# பொதுத் தகவல்கள்

## 1.0 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 1980 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட திறந்த பல்கலைக்கழகம், இலங்கையில் உள்ள ஏனைய தேசிய பல்கலைக்கழகங்கள் போன்று ஒத்த தன்மையான சட்ட மற்றும் கல்வி அந்தஸ்தைக் கொண்டதாகும்.

இப்பல்கலைக்கழகம், 18 வயதினையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் உடையோர் பிரதானமாக தமக்கு கிடைக்கும் ஓய்வு நேரத்தில், தமது வீடுகளில் இருந்து கொண்டு சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள், பட்டங்கள், பட்டமேற் பட்டங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு இட்டுச் செல்கின்ற கல்வி நிகழ்ச்சித்திட்டங்களைப் பயிலக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகம் தமது சொந்த நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்துப் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்குகின்றது. அது சொந்த முழு நேரப் பணியணியினர்களையும் சொந்த மத்திய வளாகத்தையும் கொண்டுள்ளது. அது தனக்குரிய சொந்தப் பேரவையையும் கொண்டுள்ளது. அப்பேரவை நிறைவேற்றுச் சபையாகவும் கல்விச் சபையாகவும் ஆளும் அதிகார சபையாகவும் விளங்குகின்றது.

மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிய பின்னர் கிடைக்காத அல்லது அவர்கள் பெறாதிருந்த கல்வி வாய்ப்பினை வழங்குவதால், திறந்த பல்கலைக்கழகம் தான் கவர்ந்து கொண்ட மாணவர்களின் நோக்கில் ஒரு வீட்டுக் கற்கைப் பல்கலைக்கழகமாகவும் பிற்பட்ட காலக் கல்வி வாய்ப்பினை வழங்கும் ஒரு பல்கலைக்கழகமாகவும் விளங்குகின்றது. ஏனையோரைப் பொறுத்த வரையில், அவர்கள் ஏற்கனவே பெற்றுக் கொண்ட கல்வியை மேம்படுத்திக் கொள்ளவும் விருத்தி செய்து கொள்ளவும் வாய்ப்புக்களை வழங்குகின்றது. இவ்வாய்ப்பை பூரணமாகப் பெற்றுக்கொள்ள கூடியளவு முயற்சிக்க வேண்டும்.

## 1.1 பாடநெறிகளும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களும்

திறந்த பல்கலைக்கழக சொல்லாட்சியின்படி **"பாடநெறி"** என்பதனால் கருதப்படுவது பொதுவாக ஒரு கற்கை வருடத்தினுள் பூரணப்படுத்தப்பட வேண்டிய **அடிப்படைக் கற்கை அலகு** ஆகும். அது கட்டாயமானதாகவோ விருப்பத்திற்குரியதாகவோ இருக்கலாம்.

கட்டாயப் பாடநெறிகளும் விருப்பத்திற்குரிய பாடநெறிகளும் சேர்ந்து கற்கை நிகழ்சித்திட்டத்தை அமைக்கின்றன. கற்கை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி சான்றிதழ், டிப்ளோமா அல்லது பட்டத்தை பெற்றுக்கொள்வதற்குத் தகுதி பெறலாம். கட்டாயப் பாடநெறி என்பது ஏதாவதொரு கற்கை நிகழ்ச்சித்திட்டக் கட்டமைப்பினுள் அந்நிகழ்ச்சித்திட்டத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாணவர்களினால் பூரணப்படுத்தப்பட வேண்டிய பாடநெறியாகும். திறந்த பல்கலைக்கழகம் சான்றிதழ், டிப்ளோமா அல்லது பட்டத்தைப் பெற்றுத்தரும் கல்விசார் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை முன் வைக்கின்றது.
அவை பின்வருமாறு:

1. அத்திவார நிகழ்ச்சித் திட்டங்கள்
2. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்
3. உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்
4. டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்

5. இளமாணி நிகழ்ச்சித்திட்டங்கள்
6. பட்டமேற்கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்
7. தொடருறு கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்
8. தனி நிகழ்ச்சித்திட்டங்கள்

அத்திவார கற்கை நிகழ்ச்சித்திட்டம் குறிப்பிட்ட கல்விசார் கற்கை நிகழ்ச்சித் திட்டத்திற்குள் நுழைவதற்குரிய வாயிலாகும். இவ்வத்திவாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் மட்டம் ஒன்று (F1), மட்டம் இரண்டு (F2) எனும் இரண்டு மட்டங்களில் நடத்தப்படுக்கின்றது.

கலை, வணிகம், விஞ்ஞானம், பௌதிகவியல், உயிரியல் அல்லது தொழில் நுட்பவியல் போன்ற கற்கைத் துறைகளில் ஏதாவதொன்றுக்கான அத்திவார கற்கை நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தும் மாணவர்கள் பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதிக்கப்படுவதற்குத் தேவையான கல்வி மட்டத்திற்குச் சமமான தகுதியைப் பெறுகின்றனர்.

தனியான நிகழ்ச்சித்திட்டம் யாதாயினும் முதன்மைக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்காத நிகழ்ச்சித்திட்டமாகும். அவை ஒவ்வொரு தனியாளின் தேவையின் அடிப்படையில் சுயாதீனமாகக் கற்க முடியும்.

நிகழ்ச்சித்திட்டங்களின் **கல்விசார் பெறுமானத்தை** காட்டுவதற்காக திறந்த பல்கலைக்கழகம் **'திறமைமட்டம்'** (Credit) எனும் பதத்தைப் பயன்படுத்துகிறது.

"யாதாயினும் ஒரு பரீட்சையில் மாணவர் காட்டும்" அடைவுமட்டத் தரத்தினை இப்பதம் குறிக்காது. உதாரணமாக க.பொ.த.சா.தர/உ.தரப் பரீட்சைகளில் திறமைச் சித்தி என்பது அடைவு மட்டத் தரத்தினைக் குறிக்கின்றது. ஆனால் இங்கு "திறமைமட்டம்" என்பது கல்வியில் பெறுமானம் என்னும் கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

பாடநெறியொன்றின் கல்விப்பெறுமானம் "18 திறமை மட்டம்" எனக் குறிப்பிடுவோமாயின் சாதாரணமாக வாரம் ஒன்றுக்கு 15 மணித்தியாலங்கள் வீதம் 30 வாரங்களுக்கு அப்பாடத்திற்கு 450 மணித்தியாலங்களைக் கற்பதற்காகச் செலவிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது என்பது இதன் அர்த்தமாகும். இவ்வாறு பாடநெறிகளுக்கேற்ப சுய கற்றலுக்கான காலம் திறமை மட்டங்களின் அடிப்படையில் வேறுபடும்.

பொதுவாக ஏதாவதொரு நிகழ்ச்சித்திட்டத்தின் பாடநெறிகளுக்காகக் கல்வியாண்டு ஒன்றில் மாணவர் பதிவு செய்யக்கூடிய ஆகக்கூடிய திறமைமட்டங்களின் எண்ணிக்கை 36 ஆகும். பதிவுசெய்யக்கூடிய ஆகக் குறைந்த பாடநெறி எண்ணிக்கை திறமை மட்டம் 9 க்கு சமனாகும். சாதாரண கற்கை நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிலோ அல்லது இரண்டிலோ உள்ள பாடநெறிக்கு மேலதிகமாக திறமை மட்டம் 8 ஐ விட அதிகரிக்காத கல்விப் பெறுமானம் அமையும் வகையில் தொடருறு கற்கை பாடநெறிகளுக்குப் பதிவுசெய்ய முடியும்.

இந்நிகழ்ச்சித்திட்டங்களில் ஒவ்வொரு பாடநெறிக்கும் அதற்குரிய குறியீடு ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இவை பின்வரும் வகையில் 7 எழுத்து-இலக்க குறியீடுகளைக் கொண்டுள்ளன.

| | | |
|---|---|---|
| முதல் இரண்டு எழுத்துக்கள் | : | கற்கைத்துறை (அட்டவணை 1) |
| மூன்றாவது எழுத்து | : | நிகழ்ச்சித்திட்டம் (அட்டவணை 2) |
| முதல் இலக்கம் | : | நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கல்வியாண்டு (அட்டவணை 2) |
| இரண்டாவது இலக்கம் | : | திறமை மட்டம் (அட்டவணை 3) |
| கடைசி இரண்டு இலக்கங்கள் | : | தனித்தொடர் இலக்கம். |

## Table 1
## Course Codes according to Discipline

| Faculty | Disciplines of Study | Course codes |
|---|---|---|
| **Education** | **Secondary & Tertiary Education** | **ST** |
| | **Early Childhood** | **EC** |
| | **Special Needs Education** | **SN** |
| | **Educational Leadership** | **EL** |
| **Natural Sciences** | **Computer Science** | **CS** |
| | **Botany** | **BY** |
| | **Chemistry** | **CY** |
| | **Physics** | **PH** |
| | **Zoology** | **ZY** |
| | **Mathematics** | **PE** |
| **Engineering Technology** | **Civil Engineering** | **CV** |
| | **Agricultural and Plantation Engineering** | **AG** |
| | **Electrical and Computer Engineering** | **EE** |
| | **Mathematics and Philosophy of Engineering** | **MH** |
| | **Mechanical Engineering** | **DM** |
| | **Textile and Apparel Technology** | **TA** |
| **Humanities and Social Sciences** | **Language Studies** | **LS** |
| | **Legal Studies** | **LL** |
| | **English Language Teaching** | **LL** |
| | **Social Studies** | **DS** |
| **Health Science** | **Nursing** | **NG** |
| | **Medical Laboratory Sciences** | **MD** |
| | **Pharmacy** | **FM** |
| | **Basic Sciences** | **BS** |
| | **Psychology and Counselling** | **PL** |
| | **Health Education and Research** | **HE** |
| **Faculty of Management Studies** | **Organizational Studies** | **OS** |
| | **Accounting and Finance** | **AF** |
| | **Human Resource Management** | **HR** |
| | **Marketing Management** | **MM** |

## அட்டவணை 2: பாடநெறி மட்டங்கள்

**இலங்கை தகைமை சட்டகத்திற்கு அமைவாக (SLQF) - 2015**

| **SLQF மட்டம்** | **தகைமை சான்றிதழ்** |
|---|---|
| 12 | கலாநிதி பட்டம் |
| 11 | முது தத்துவமாணி பட்டம் |
| 10 | முதுமாணி – பாடநெறி வேலை மற்றும் ஆராய்ச்சிக் கூறு உள்ளடங்களாக |
| 9 | பாடநெறி வேலைகள் மட்டும் |
| **8** | **பட்டமேற் டிப்ளோமா** |
| 7 | பட்டமேற் சான்றிதழ் |
| 6 | இளமாணி பட்டம் (சிறப்பு) |
| 5 | இளமாணி பட்டம் |
| 4 | உயர் டிப்ளோமா |
| 3 | டிப்ளோமா |
| 2 | க.பொ.த. உயர் தரம் |
| 1 | க.பொ.த. சாதாரண தரம் |

**அட்டவணை 3: திறமை மட்டம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடநெறி குறியீட்டின் இரண்டாவது எண் | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 0 |
| திறமை மட்டம் | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | 0 |

## 1.2. கற்பித்தல் முறைகள்

திறந்த பல்கலைக்கழகத்தில் பல்வேறு வழிமுறைகளில் கற்பித்தல் நடைபெறும் .

### (1) நிகழ்நிலை கற்றல்

இந்நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புப்பட்ட சகல நிகழ்நிலை பாடநெறிகளும் Moodle – LMS – (OULMS) இல் விருத்தி செய்யப்பட்டுள்ளது. நீங்கள் உங்களுடைய பயனுர் பெயர் (username) மற்றும் கடவுச்சொல் (password) என்பவற்றைப் பயனபடுத்தி OULMS இல் பிரவேசிக்கலாம். நீங்கள் இந்த நிகழ்நிலை பாடநெறியினுள் தொடர்ச்சியாக பிரவேசிக்கும் போது அத்தியாவசிய கற்றல் சாதனங்கள் மற்றும் மேலதிக கற்றல் சாதனங்கள் தொடர்பாக அறிந்துக் கொள்ளலாம். இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது நீங்கள் இந்த நிகழ்நிலை பாடநெறிகளுக்கூடாக சுயக்கற்றலில் ஈடுபட வேண்டும் என்பதாகும்.

### (2) கட்புல – செவிப்புல சாதனங்கள்

இச்சாதனங்கள் குறிப்பாக சுயமாகக் கற்போருக்கு முக்கியமானவை. இவை அச்சிட்ட விடயங்களைக் குறைநிரப்புவதற்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்துவதற்கும் உதவுகின்றன. மாணவர்களுக்கு எல்லாப் பிராந்திய/மத்திய நிலையங்களிலும் பாடநெறிக்குப் பொருத்தமான கட்புல-செவிப்புல நாடாக்களைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் வசதிகள் உள்ளன. விசேடமாக நாவல பிராந்திய கற்கை நிலையத்தில் அதற்கென கட்புல-செவிப்புல மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் மு. ப. 9.00 மணி தொடக்கம் பி. ப. 7.00 மணி வரை இந்நிலையம் திறக்கப்பட்டிருக்கும்.

### (3) நாட்பாடசாலைகளும் போதனா வகுப்புகளும்

மாணவர் தாமே சுயக் கற்றலில் ஈடுபட வேண்டும் என்ற நோக்குடன் நிகழ்நிலை பாடநெறிகள் மற்றும் கட்புல செவிப்புல பாடங்கள் வழங்கப்பட்ட போதும் அவற்றிற்கு மேலதிகமாக மாணவர்களுக்கு உதவுவதற்காக, நாட்பாடசாலைகள் மற்றும் போதனா அமர்வுகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களில் நடத்தப்படும்.

### (4) நூலக வசதிகள்

எல்லாப் பிராந்திய/ கற்கை நிலையங்களும் மாணவர் உசாத்துணைக்கு ஏதுவாகப் பாடநூல்களைக் கொண்டுள்ளன. நாவலவிலுள்ள பிரதான நூலகம் மாணவர்களுக்காக மு. ப. 9.00 மணியிலிருந்து பி. ப. 7.00 மணிவரை கிழமை நாட்களில் திறந்து இருக்கும். வார இறுதி நாட்களிலும் சில பகிரங்க விடுமுறை தினங்களிலும் மாணவர்களுக்காக மு. ப. 9.00 மணியிலிருந்து பி. ப. 6.00 மணிவரை திறந்து இருக்கும்.

## 1.3 மதிப்பீட்டு முறை

குறிக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஒப்படைகள், தொடர் கணிப்பீட்டு பரீட்சைகள் (CAT) என்பவற்றின் ஊடாகவும் பாடநெறியின் முடிவில் நடத்தப்படும் இறுதிப் பரீட்சைகளினூடாகவும் ஒரு மாணவனின் முன்னேற்றம் நிகழ்ச்சித்திட்டம் முழுவதிலும் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகின்றது.

ஒவ்வொரு பாடநெறிக்கும் குறிப்பிட்டளவு எண்ணிக்கையான ஒப்படைகளை மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும். மாணவர்களுக்கு இவை திருப்பி அனுப்பப்படுவதற்கு முன்பு ஒப்படைகள் பற்றிய கருத்துக்கள்/பின்னூட்டல்கள் எழுதப்பட்டு, திருத்தப்பட்டு தரப்படுத்தப்படும்.

பாடநெறியின தன்மையைப் பொறுத்து பரீட்சைகள், ஆய்வுகூடச் செய்முறைகள், வெளிக்கள வேலைகள் போன்றவற்றையும் இவ்வொப்படைகள் உள்ளடக்கலாம். ஒவ்வொரு பாடநெறிக்கும் தொடர் மதிப்பீட்டுக்கான ஒப்படைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வின் போது மாணவர்களுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு பாடநெறியின் முடிவிலும் பரீட்சை ஒன்று நடாத்தப்படும். தொடர் மதிப்பீடு மற்றும் இறுதிப்பரீட்சை என்பனவற்றில் பெற்ற மொத்தப் பெறுபேற்றின் அடிப்படையில் ஒவ்வொரு பாடநெறியினதும் இறுதித்தரம் நிர்ணயிக்கப்படும்.

பாடநெறியின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையானது தொடர் மதிப்பீடுகளில் மாணவர் பெறும் சித்தியில் தங்கியுள்ளது.

ஏதாவது பயிற்சி நெறியில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற மாணவர் தகுதி பெறத்தவறுமிடத்து மேற்படி பயிற்சி நெறிக்கு அவர் மீளப் பதிவு செய்தல் வேண்டும்.

இறுதிப் பரீட்சையில் சித்தி பெறத்தவறும் மாணவர்கள் மீளத்தோற்றும் பரீட்சார்த்திகளாக மீண்டும் முயற்சி செய்யலாம். இதன்போது மீண்டும் ஒப்படைகளைச் சமர்ப்பித்து குறிப்பிட்ட பாடநெறியில் அவர்கள் தோற்றுவதற்கான தகுதி பெறவேண்டியதில்லை.

## 1.4. பிராந்திய சேவைகள்

பிராந்திய / கற்கை நிலையங்கள் பாடநெறிச் சாதனங்களையும், உசாத்துணை நூல்களுக்கான வசதிகளையும் வழங்கும். இது அங்குள்ள வசதிகளைப் பொறுத்து மட்டுப்படுத்தப்பட்டதாக அமையும். மாணவர் ஒன்றுகூடி கலந்துரையாடவும் வகுப்பறைக் கற்பித்தலுக்கான சந்தர்ப்பங்களை வழங்கும். மத்திய நிலையங்களில் அச்சிட்ட நூல்களைப் பெறவும், ஒப்படைகளைச் சமர்ப்பிக்கவும் முடியும். கொழும்பு, கண்டி ஆகிய நிலையங்களில் ஆய்வுகூடவசதிகள் கிடைக்கும்.

திறந்த பல்கலைக்கழக பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன.

**பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள்**

| | | | |
|---|---|---|---|
| **பிராந்திய நிலையங்கள்** | | | |
| WP 10 | கொழும்பு | NP 40 | யாழ்ப்பாணம் |
| CP 20 | கண்டி | EP 60 | மட்டக்களப்பு |
| SP 30 | மாத்தறை | NC 50 | அனுராதபுரம் |
| UP 80 | பதுளை | NW 70 | குருணாகல் |
| **கற்கை நிலையங்கள்** | | | |
| SP 32 | காலி | SG 91 | கேகாலை |
| WP 12 | களுத்துறை | NC 51 | பொலன்றுவை |
| SP 31 | அம்பலாங்கொட | NP 41 | வவுனியா |
| NW 72 | குளியாப்பிட்டிய | EP 62 | திருகோணமலை |
| EP 61 | அம்பாறை | UP 82 | புத்தள/மொனராகலை |
| UP 81 | பண்டாரவளை | WP 11 | கம்பஹா |
| SG 90 | இரத்தினபுரி | SP 33 | அம்பலாந்தொட்ட |
| NP 42 | கிளிநொச்சி | NP 43 | முல்லைத்தீவு |
| NW 71 | புத்தளம் | | மன்னார் |
| | | | மாத்தளை |

## 1.5 வேறு சேவைகள்

**(i) சிற்றுண்டிச்சாலை வசதிகள்**

பல்கலைக்கழக உணவகத்தில் நியாய விலைகளில் உணவைப் பெற்றுக் கொள்ளலாம். கிழமை நாட்களிலும் வார இறுத் நாட்களிலும் உணவகம் தனது சேவையை வழங்குகின்றது. கொழும்பு, கண்டி மற்றும் மாத்தறை ஆகிய நிலையங்களில் சிற்றுண்டிச்சாலை வசதிகள் உள்ளன.

## 1.6 கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டணங்கள்

கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பதிவு செய்யும் போதும் கட்டணங்கள் செலுத்துமாறு பணிக்கப்படும் வேறு சந்தர்ப்பங்களிலும் அவை காலதாமதமின்றி செலுத்தப்படல் வேண்டும். முன் அறிவித்தல் இன்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்டணங்களை மாற்றியமைக்கும் அதிகாரம் பல்கலைக்கழகத்திற்கு உள்ளது. ஒவ்வொரு கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்பவும் கட்டணங்கள் வேறுபடும். பந்தி இல. 2.9 இன் கீழ் கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கட்டணங்கள் தரப்பட்டுள்ளன.

# இரண்டாம் பகுதி

# கற்கை நிகழ்ச்சித்திட்டம்

## கல்விப்பீடம்

கல்விப்பீடமானது பின்வரும் நான்கு துறைகளைக் கொண்டுள்ளது.

i.இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறை
ii.ஆரம்ப மற்றும் முன்பிள்ளைப் பருவ கல்வித்துறை
iii.விசேடதேவைகள் கல்வித்துறை
iv. கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத்துறை

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத்துறையானது பின்வரும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களையும் குறுகியகால பாடநெறிகளையும் நடைமுறைப்படுத்துகின்றது. அவையாவன:

1. கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
2. பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா (நிகழ்நிலை)
3. இலங்கை கல்வி நிருவாகச் சேவையினருக்கான 100 மணித்தியால இயலுமை விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம் (நிகழ்நிலை)

### 2.0 கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

இதுவொரு 12 மாதங்களைக் கொண்ட கல்வி நிகழ்ச்சித்திட்டமாகும்.

### 2.1 இலக்கு

இந்நிகழ்ச்சித்தட்டத்தின் பிரதான இலக்கு கல்வித் துறையைச் சேர்ந்த முகாமைத்துவ மற்றும் நிருவாக உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவத் தேர்ச்சிகளை விருத்தி செய்தலாகும்.

### 2.2 நுழைவுத் தகைமைகள்

**அனுமதித் தேவைகள்**

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதிப் பெற விரும்பும் நபரொருவர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் குறைந்தது மூன்று வருட காலத்தைக் கொண்ட இளமாணிப்பட்டம் பெற்ற பட்டதாரியாக (SLQF மட்டம் 5 இற்கு அமைவாக குறைந்தபட்சம் தொன்னூறு (90) பாடநெறி திறமை மட்டங்களை கொண்டிருத்தல் வேண்டும்) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமமான தகைமைகள் **உடையவராகவும்**

2. அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் சேவையிலுள்ள ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக அல்லது ஆசிரியர் கல்வியியலாளராக அல்லது இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தராக அல்லது பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி, தொழிநுட்பக்கல்லூரி, ஆசிரியர் கல்லூரி ஆகியவற்றின் கல்விசார் ஆளணியின் முழுநேர உறுப்பினராக அல்லது அரசாங்க ஆசிரியர் மத்திய நிலையத்தின் முகாமையாளராக அல்லது தேசிய கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளராக அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றின் தலைவராக அல்லது வேறு ஏதேனும் இலங்கை திறந்த பல்கலைக்கழக

மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி நிருவாக மற்றும் முகாமைத்துவத் துறையினைச் சேர்ந்த வாண்மையாளர்களாக **இருத்தல் வேண்டும்.**

**குறிப்பு:** உங்களுடைய பட்டம் இலங்கையின் அங்கீகரக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பெறப்படாமல் வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது வழிவரு (online) முறையில் பெறப்பட்டதாக இருப்பின் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றதாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான கடிதமொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். (வெளிநாடுகளில் பெறப்பட்ட பட்டமாக இருப்பின் குறித்த பட்டம் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அது குறைந்தபட்சம் மூன்று வருடங்களைக் கொண்டது என்பது கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்).

- தகைமைப்பெற்ற சகல விண்ணப்பதாரர்களும் குறித்த கல்வித்துறையின் கொழும்பு பிராந்தியத்தில் இடம்பெறும் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளித்தல் வேண்டும்.
- நேர்முகத் தேர்வில் தகைமைப்பெற்று தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியல் பல்கலைக்கழக இணையத்தளமான www.ou.ac.lk இல் வெளியிடப்படும்.
- நிகழ்ச்சித்திட்டத்துக்கு தகைமைப் பெற்றவர்களக்கான பதிவு நேர்முகத் தேர்வுக்குப் பின்னர் இடம்பெறும்.
- **நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பக் கூட்டத்திற்கு (திசைமுகப்படுத்தல் அமர்வு) பதிவு செய்து கொண்ட சகல மாணவர்களும் கட்டாயம் சமூகமளிக்க வேண்டும்.**

## 2.3 கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் பாடநெறி உள்ளடக்கம்

கட்டாய பாடநெறிகள் - 06 மற்றும் தெரிவுக்குரிய பாடநெறிகள் - 04

| | | | |
|---|---|---|---|
| கட்டம் - I | **கட்டாய பாடநெறிகள் - 03** | | |
| | 1 | ELP8401 | கல்வி முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் |
| | 2 | ELP8302 | கல்விச் சூழமைவில் ஒழுங்கமைப்புக் கலாசாரம் |
| | 3 | ELP8503 | கல்வித் தலைமைத்துவம் |
| | **தெரிவுப் பாடங்கள் (இவற்றிலிருந்து ஒரு பாடநெறியினை தெரிவு செய்தல் வேண்டும்)** | | |
| | 4 | ELP8304 | கல்வியில் வள முகாமைத்துவம் |
| | 5 | ELP8309 | கலைத்திட்ட முகாமைத்துவம் |
| | | | |
| கட்டம் - II | **கட்டாய பாடநெறிகள் - 03** | | |
| | 6 | ELP8505 | கல்வி தலைமைத்துவம் மற்றும் விளைதிறன்மிக்க ஒழுங்கமைப்புகள் |
| | 7 | ELP8306 | கல்வி ஒழுங்கமைப்புகளில் கண்காணிப்பும் மேற்பார்வையும் |
| | 8 | ELP8508 | சுயாதீன கற்கை |
| | **தெரிவுப் பாடங்கள் (இவற்றிலிருந்து ஒரு பாடநெறியினை தெரிவு செய்தல் வேண்டும்)** | | |
| | 9 | ELP8307 | கல்வியில் கொள்கை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் செயன்முறையும் |
| | 10 | ELP8310 | செயற்றிட்ட முகாமைத்துவம் |

சுயாதீன கற்கை (ELP8508) எனும் பாடநெறியானது கல்வி தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத் துறையுடன் தொடர்புப்பட்டதாக சிறியளவிலான ஆய்வொன்றினை மேற்கொள்வதனூடாக மாணவர்களிடத்தில் கல்விசார் ஆய்வு பற்றிய அறிவு, திறன்கள் மற்றும் நடைமுறைகளை விருத்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

2.4 நாட்பாடசாலைகளும் போதனா அமர்வுகளும்

## 2.4 நாட்பாடசாலைகளும் போதனா வகுப்புகளும்

பிரதான கற்பித்தல் முறையாக நிகழ்நிலை பாடநெறிகள் Moodle – LMS (OULMS) விருத்தி செய்யப்பட்டுள்ளன. கல்வி ஆண்டின் போது இதற்கு மேலதிகமாக கொழும்பு பிராந்திய நிலையத்தில் நாட்பாடசாலைகள் நடைபெறும். செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், செயற்பாடு சார்ந்த வகையிலான நாட்பாடசாலைகளாக இவை நடைபெறும். மாணவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதுவும் நாட்பாடசாலைகளின் நோக்கமாகும்.

நாட்பாடசாலைகளுக்கு மேலதிகமாக, சிறுகுழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்டதும் 36 மணித்தியாலங்கள் கொண்டதுமான போதனா வகுப்புக்கள் நடைபெறும். இங்கு மாணவர் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஒப்படைகளுடன் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பொதுப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்படுவதுடன் அவர்களுக்குத் தேவையான வழிகாட்டலும் வழங்கப்படும். அத்துடன் மாணவர்களை இறுதி எழுத்து பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவற்கு போதனா வகுப்புக்களில் வழிகாட்டலும் வழங்கப்படும்.

## 2.5 கற்பித்தல் மொழிமூலம்

நிகழ்ச்சித்திட்டம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் நடத்தப்படும்.

## 2.6 பிராந்திய/ கற்கை நிலையங்கள்

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்பு பிராந்திய நிலையத்தில் மட்டுமே நடத்தப்படும்.

- **குறிப்பு :- விண்ணப்பதாரிகள் எக்காரணம் கொண்டும் தாங்கள் பதிவு செய்து கொண்ட நிலையத்தையோ கற்கை மொழிமூலத்தையோ மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.**

## 2.7 மதிப்பீடு

மதிப்பீடு பின்வரும் முறைகளில் நடைபெறும்

(அ) **குறிக்கப்பட்ட கட்டாயமான எழுத்து மூலமான ஒப்படைகள் மூலம் நடத்தப்படும் தொடர்மதிப்பீடு:** இவ்வொப்படைகள் குறிப்பிட்ட தினத்தில் அல்லது அதற்கு முன்பதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக திறமைமட்டம் 5 மற்றும் 4 கொண்ட பாடநெறிகளுக்கு மாணவர்கள் மூன்று (03) ஒப்படைகளையும் (ELP8508 தவிர்ந்த) திறமைமட்டம் 3 கொண்ட பாடநெறிகளுக்கு அளிக்கப்படும் 2 ஒப்படைகளையும் சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு குறைந்பட்சம் 'C' அல்லது அதற்கு உயர்ந்த தரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் கூட்டு மொத்த மதிப்பீட்டுப் புள்ளிகளின் சராசரி புள்ளி (Overoll Continuous Assessment Mark – OCAM) 40% ஆக இருக்க வேண்டும்.

ஒரு பாடநெறிக்குரிய இறுதி சித்தி கூட்டு மொத்த மதிப்பீட்டுப் புள்ளிகளின் சராசரியின் (OCAM) 40% உடன் இறுதி எழுத்துப் பரீட்சையில் மாணவர் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் சராசரியின் 60% கூட்டபடுவதனூடாக தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு: விண்ணப்பதாரி ஒருவர் இறுதிப்பரீட்சையில் குறைந்தபட்சம் 40% புள்ளிகளை குறித்தவொரு பாடநெறிலில் பெறத்தவறுமிடத்து குறித்த பாடநெறியின் OCAM இறுதிப் பரீட்சைப் புள்ளியுடன் சேர்க்கப்பட மாட்டாது.**

(ஆ)இறுதி எழுத்துப்பரீட்சை கட்டங்கள் இரண்டிலும் (02) உள்ள பின்வரும் பாடநெறிகளுக்கும் நடத்தப்படும்

கட்டம் 1: ELP8401, ELP8302, ELP8503, ELP8304, ELP8309

கட்டம் 2: ELP8505, ELP8306, ELP8307, ELP8310

**குறிப்பு:** இறுதி எழுத்துப் பரீட்சை ELP8508 எனும் பாடநெறிகு (சுயாதீனக் கற்கை) நடத்தப்பட மாட்டாது. எவ்வாறாயினும் மாணவர்கள் சிறிய அளவிலான ஆய்வொன்றினை செய்து அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டும். (இந்த இறுதி ஆய்வறிக்கை இப்பாடநெறிக்குரிய இறுதிப் பரீட்சையாகக் கருதப்படும்.

**2.8. சான்றிதழ் வழங்கல்**

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ பட்டமேற் டிப்ளோமா சான்றிதழ் இலங்கை திறந்த பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளுக்கு அமைய வழங்கப்படும்.

**2.9 கட்டணங்கள்**

மாணவர் பதிவுக் கட்டணமும் போதனைக் கட்டணமும்

| விபரம் | தொகை |
|---|---|
| பதிவுக் கட்டணம் | 1,500.00 |
| வசதிகள் கட்டணம் | 2,500.00 |
| வாசிகசாலைக் கட்டணம் | 200.00 |
| ஒரு திறமை மட்டத்திற்கான கட்டணம் | 3,000.00 |
| மொத்த போதனைக் கட்டணம் | 93,000.00 |

வெளிநாட்டு மாணவர்களுக்கான கட்டணங்கள் பின்வருமாறு அமையும்.

| விபரம் | தொகை |
|---|---|
| பதிவுக் கட்டணம் | US Dollars 100 (ஒரு வருடத்திற்கு) |
| அபிவிருத்தியடைந்த நாடுகள் | US Dollars 50 (ஒரு திறமை மட்டத்திற்கு) |
| அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் | US Dollars 25 (ஒரு திறமை மட்டத்திற்கு) |

மாணவர்களால் உரிய கொடுப்பனவுகள் இரண்டு தவணை முறைகளில் செலுத்தப்படவேண்டும். பதிவு செய்யும்போது மொத்த கட்டணத்தின் 60% இனை செலுத்துவதுடன் மிகுதியாக உள்ள 40% ஐ நிகழ்ச்சித்திட்டத்தின் நடுப்பகுதியில் செலுத்துதல் வேண்டும். இறுதிப் பரீட்சையில் சித்தியடையத்தவறும் மாணவர்கள் மீண்டும் தம்மை அப்பாட நெறிகளுக்காகப் மீள் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அப்பாட நெறிகளுக்குரிய கட்டணங்களையும் அவர்கள் மீளவும் செலுத்த வேண்டியிருக்கும்.

**கற்கைநெறி / நிகழ்ச்சித்திட்டத்தினைப் பிற்போடல்**

நீங்கள் நிகழ்ச்சித்திட்டத்தினை முழுமையாகப் பிற்போட அனுமதி வழங்கப்படமாட்டாது. கற்கை நெறிகளைப் பிற்போடுவதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் திறமைமட்டம் எட்டு (08) இற்குக் குறையாத பாடநெறிகளுக்கு பதிவுசெய்தல் வேண்டும்.

நீங்கள் பதிவுசெய்துள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள பாடநெறிகளை பிற்போடுவதற்கான கால எல்லை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்ததில் இருந்து இரண்டு (02) **மாதங்களில்** முடிவடையும். எக்காரணத்தினாலும் இத்தினம் நீடிக்கப்படமாட்டாது. பின்னர் பதிவு செய்கையில் முதலாவது தடவையிலும் பார்க்க கூடிய கட்டணத்தைச் செலுத்த வேண்டியேற்படும்.

**பதிவுசெய்துக் கொண்ட விருப்புக்குரிய பாடநெறிகளை மாற்றுதல்**

விண்ணப்பதாரிகள் பதிவுசெய்துக்கொண்ட விருப்புக்குரிய பாடநெறிகளை மாற்றுதல் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்ததில் இருந்து இரண்டு (02) **மாதங்களில்** முடிவடையும். எக்காரணத்திற்காகவும் இக்கால அளவு மாற்றப்படமாட்டாது.

**பதிவு செய்ததன் பின் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீங்குதல்**

பதிவுசெய்த பின் **ஒரு மாதத்தினுள்** செலுத்தப்பட்ட கட்டணத்தில் 10% கழிவுத் தொகையுடன் நிகழ்ச்சித்திட்டத்தில் இருந்து நீங்கிக்கொள்ள முடியும். எவ்வித காரணத்தினாலும் இக்கால எல்லை நீடிக்கப்படமாட்டாது. பல்கலைக்கழகம் தெரிவிக்கும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் மாணவர்கள் பதிவு செய்தல் / மீள்பதிவு செய்தல் இயலாது.

**குறிப்பு: பதிவு செய்துக் கொண்டதன் பின்னர் நீங்கள் உங்களுடைய மாணவர் அங்கத்துவத்தினை பதிவு செய்துக் கொண்ட கல்வி ஆண்டு உள்ளடங்கலாக தொடர்ச்சியாக நான்கு (04) கல்வி ஆண்டுகளுக்கு வைத்துக் கொள்ளலாம். மேலும் தொடர் ஒப்படைகளுக்காகப் பெற்றுக் கொண்ட தகுதியானது பதிவு செய்துக் கொண்ட முதலாவது கல்வி ஆண்டிற்கு மேலதிகமாக ஒரு (01) வருடத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும்.**

## 2.10 கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பம்

கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் ஆரம்ப நிகழ்வின் பின்னர் உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை மாணவர்கள் தமக்கு உரித்தான வலயக் கல்வி அலுவலரிடம் வழங்கி அனுமதி பெற்று அதனைத் தங்கள் சுயவிபரக்கோவையில் வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது இறுதிப் பரீட்சைக்கு தங்களுக்குரிய கற்கை விடுப்பினைப் பெறுவதற்கு உதவியாக அமையும். பின்னர் எவ்வித காரணங்களின் அடிப்படையிலும் விண்ணப்பத்தின் பிரதி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படமாட்டாது.

## 2.11 விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

நீங்கள் பின்வரும் இணையத்தளத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்து உரிய படிகளைப் பின்பற்றி படிவத்தினைப் பூர்த்திச் செய்யலாம்.

https://reginfo.ou.ac.lk/applyonline/

## The Open University of Sri Lanka

Online Application Process

1. New Applicants

If you are a new applicant for an OUSL porgramme, you should only register once by creating a new account. To do that, click Create New Account.
Once you create your account, you can log in by entering your Username and Password.

2. Returning Applicants

If you are an existing OUSL student with a previous on-line account with us, simply enter your login account details below (ie. Username and Password) and click �Login� to proceed.

Username

Password

Login

Create New Account